சத்தியம் ஒளிருமிடத்தில் வெற்றி சூழும்

# சௌந்தர்ய மடல்

பெண்கள் மற்றும் குழந்தைகளின் முன்னேற்றத்தினை
பிரதிபலிக்கும் காலாண்டு வெளியீடு [மே – ஆகஸ்ட் 2013]

தொலை நோக்கு: காந்திய வழியில் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சி

இந்திய மருத்துவக் கழகம், திண்டுக்கல் மாவட்டக் கிளையின் சார்பாக மருத்துவர்கள் தினம் 28–07–2013 அன்று திண்டுக்கலில் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் பல துறைகளில், குறிப்பாக மருத்துவம், இலக்கியம் மற்றும் சமூகப்பணி ஆகியவற்றில் சிறப்பாகப் பணிபுரிந்து வருபவர்கள் கௌரவிக்கப்பட்டனர். காந்திகிராம கஸ்தூர்பா மருத்துவமனையில் கடந்த 44 ஆண்டுகளாக காந்திய வழியில் மக்களுக்குச் சிறந்த மருத்துவப் பணியாற்றிவரும் காந்திகிராம அறக்கட்டளையின் வாழ்நாள் அறங்காவலர் டாக்டர் ஆர். கௌஸல்யாதேவி அவர்களின் தன்னலமற்ற சேவையைப் பாராட்டி, திண்டுக்கல் இந்திய மருத்துவக் கழகம் டாக்டர் ஆர். கௌஸல்யாதேவி அவர்களுக்கு '**வாழ்நாள் சாதனையாளர்**' என்ற விருதினை வழங்கிக் கௌரவித்தது. திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் திரு.என்.வெங்கடாச்சலம் இ.அ.ப. அவர்கள் விருதினை வழங்கி வாழ்த்தினார்கள்.



## 150–ஆவது விவேகானந்தரின் ரத ஊர்வலம்



காந்திகிராம அறக்கட்டளையில், சுவாமி விவேகானந்தரின் 150–ஆவது ஜெயந்திவிழா 01.07.2013 அன்று கொண்டாடப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள சுவாமி விவேகானந்தர் ரதம், அன்று காலை 11.00 மணியளவில் காந்திகிராமம் வந்தது. பூரண கும்ப ஆரத்தியுடன் குழந்தைகள், பணியாளர்கள் புடைசூழ அறக்கட்டளை நிர்வாகஸ்தர்கள் ரதத்தை வரவேற்றனர். அதனைத் தொடர்ந்து டாக்டர் சௌந்தரம் மணிமண்டபத்தில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்குத் தலைமைதாங்கிய காந்திகிராம அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் திரு. எம். ஆர். ராஜகோபாலன் அவர்கள் தனது தலைமையுரையில், சிகாகோவில் சுவாமி விவேகானந்தர் ஆற்றிய உரையினை விளக்கினார்.

காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகத்தின் காந்திய சிந்தனை மற்றும் அமைதியியல் துறையைச் சார்ந்த முனைவர் எஸ். நாராயணசாமி அவர்களும் முனைவர் எஸ். ராதாகிருஷ்ணன் அவர்களும் இணைந்து விவேகானந்தர் பற்றி எழுதிய ***'Promoting Ideology of Swami Vivekanada and Mahatma Gandhi* - Gandhigram Model'** என்ற நூலினை, காந்திகிராம அறக்கட்டளையின் செயலாளர் திரு. கே. சிவக்குமார் அவர்கள் வெளியிட சிறப்பு விருந்தினர் காஞ்சிபுரம் இராமகிருஷ்ண மடத்தின் தலைவர் சுவாமி தர்மாத்மானந்தர் அவர்கள் பெற்றுக்கொண்டார். புத்தகத்தின் ஏற்புரையை முனைவர் நாராயணசாமி அவர்கள் வழங்கினார்.

திரு. தர்மாத்மானந்தர் அவர்கள் பாடலுடன் கூடிய சிறப்புரை வழங்கினார். அவரைத் தொடர்ந்து இராமகிருஷ்ண மட சுவாமிகள் பலரும் சிறப்புரை ஆற்றினர். இவ்விழாவில் பள்ளிக் குழந்தைகள், பணியாளர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

---

## செடிகளுக்கிடையே தகவல் தொடர்பு

(அதுவும் இண்டர்நெட் போன்று)

**திரு. எம்.ஆர். ராஜகோபாலன்**

நிர்வாக அறங்காவலர், காந்திகிராம அறக்கட்டளை

சில தாவரங்கள் பூமிக்கடியே கேபிள் அமைத்து இண்டர்நெட் போன்ற சாதனம் வழியாகத் தகவல்களைப் பரிமாறிக்கொள்கின்றன என்று நான் சொன்னால், நீங்கள் நம்பமாட்டீர்கள் என்றும், எனக்கு ஏதாவது மூளைக்கோளாறு ஏற்பட்டுவிட்டதா என்றும் சந்தேகப்படுவீர்கள் என்பதும் நன்றாகவே விளங்குகிறது. இருப்பினும், இது அறிவியல் கற்பனை (Science Fiction) அல்ல. அறிவியல் அடிப்படையில் சமீபகாலத்தில் நிரூபணம் செய்யப்பட்டு, அறிவியல் சார்ந்த இதழ்களிலும் வெளியிடப்பட்ட உண்மைத் தகவல்தான். 'இண்டர்நெட்' சமாச்சாரத்தை விளக்குவதற்கு முன்பாக தாவரங்கள் பற்றி வேறுசில தகவல்களுடன் பகிர்ந்துகொள்ள விழைகிறேன்.

தாவரங்களுக்கு உணர்வு உண்டு; அவைகளும் துன்பமுறும்போது வருத்தமடைகின்றன; சோர்வடைகின்றன என்பதை இந்திய விஞ்ஞானி ஜே.ஸி. போஸ் அவர்கள் 1900–ஆம் ஆண்டிலேயே சில பரிசோதனைகள் வாயிலாக விளக்கியுள்ளார்.

நல்ல சங்கீதத்தைக் கேட்கும் பூச்செடிகள் அதிகமாகப் பூக்கும். வேர்க்கடலை அல்லது நெல் வயலில் உரிய பருவத்தில் சில நாட்களுக்கு வயலின் இசைக்கப்பட்டால் விளைச்சல் சற்று கூடுதலாக இருக்கும் என்பதை பேராசிரியர் T.C. சிங் என்ற பெயர் கொண்ட விஞ்ஞானி 1950–களில் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் மேற்கொண்ட ஆராய்ச்சிகள் வாயிலாக நிரூபணம் செய்துள்ளார். அதேபோல், அன்புடன் வளர்க்கப்படும் செடிகளில் வளர்ச்சி நன்றாக இருக்கும். அச்சுறுத்தப்படும் செடிகள் வாட்டமடைகின்றன என்பதுகூட நிரூபிக்கப்பட்ட உண்மைகள். இத்தகவல்களை 'தி சீக்ரெட் ஆப் ப்ளாண்ட்ஸ்' (The Secret Life of Plants) என்ற நூலில், ஆசிரியர்கள் Peter Tomokim and Christopher Bird விபரமாக தந்துள்ளனர்.

இவைதவிர, அனுபவத்தின் வாயிலாக அறியப்பட்ட தகவல் ஒன்றும் உண்டு. 100 பழமரங்கள் அடங்கிய ஒரு தோப்பு அல்லது 100 கத்தரி/தக்காளிச் செடிகள் வளரும் ஒரு தோட்டத்தை உதாரணத்திற்கு எடுத்துக்கொள்வோம். இப்படிப்பட்ட தோட்டத்தின் ஒரு மூலையில் அசுவனி அல்லது வேறு ஏதோ ஒரு பூச்சியின் தாக்குதல் ஏற்படும்போது முதல் 5–10 செடி/மரங்களில் பெருமளவு பாதிப்பு ஏற்படும். அடுத்த வரிசைகளில் நோயின் தாக்கம், படிப்படியாகக் குறைந்து – பின் வரிசைகளில் உள்ள 50–60 மரங்களில்/செடிகளில் பாதிப்பு எதுவும் இருக்காது. இதற்கான காரணம் அனுபவத்தினால் அறியப்பட்டு – ஆராய்ச்சிகளின் வாயிலாக நீரூபிக்கப்பட்டுள்ளது. என்னவெனில், முதல் வரிசையில் உள்ள செடிகள் தாக்கப்பட்ட உடனேயே பின் வரிசைகளில் உள்ள தாவரங்களில் நோய்த் தடுப்பு சக்திக்கான வேதியல் பொருள்கள் (Chemicals) உற்பத்தி செய்யப்பட்டு இலைகளில் சேமித்து வைக்கப்படுகின்றன. இவ்வாறு நிகழ்வது சகஜம் என்றாலும், முதல் வரிசையில் உள்ள செடிகள் பாதிக்கப்படும் தகவல் பின் வரிசைகளில் உள்ள தாவரங்களுக்கு எப்படித் தெரியவருகிறது என்பதுதான் சமீபகாலம் வரை புரியாத புதிராகவே இருந்து வந்துள்ளது. பாக்ஸ்டர் (Backster) போன்ற சில ஆராய்ச்சியாளர்கள் தாவரங்கள் டெலிபதி வழியாகத் தகவல்களைப் பரிமாறிக்கொள்வதாக ஊகித்தார்கள். 'டெலிபதி' அறிவியல் அடிப்படையில் நிரூபிக்கப்படவில்லை என்பதால்

பல ஆராய்ச்சியாளர்களும் இத்தகவல் பரிமாற்றம் ஒரு புதிரான – சவாலான விஷயம் என்று கூறிவந்தனர்.

இந்தப் புதிருக்குத்தான் சமீபகாலத்தில் விடைகிடைத்துள்ளது. அதுதான் தாவரங்களுக்கிடையே அமைந்துள்ள 'இண்டர்நெட்'. இந்தத் தகவலை 2010–ஆம் ஆண்டில் சைனாவில் சில விஞ்ஞானிகள் ஆராய்ச்சிகள் வாயிலாகக் கண்டறிந்தனர். அங்குள்ள காய்கறித் தோட்டத்தில் ஒரு தக்காளிச் செடியை இலைப்புழு நோய் (Leaf Blight) தாக்கியது. அருகே உள்ள ஏனைய செடிகளில் நோய் எதிர்ப்புத் திறன் கொண்ட மரபணுக்கள் செயல்படத் தொடங்கின. இதனைக் கண்ட விஞ்ஞானிகள் நோய்தாக்கப்பட்ட செடிகளைக் காற்று வெளியேற முடியாதபடி வலைத்துணிகளால் மூடிவைத்தனர். அவ்வாறு செய்தபின்பும் மற்றைய செடிகளில் நோய் எதிர்ப்புக்கான மரபணுக்கள் செயல்படுவது நிற்காமல் தொடர்ந்தது. ஆரம்பம் முதலே விஞ்ஞானிகளுக்கு பூமிக்கடியிலிருந்து தகவல் பரவி இருக்கக்கூடும் என்ற சந்தேகம்/ஊகம் இருந்தது. அது இப்போது உறுதி செய்யப்பட்டுவிட்டது. அப்படியானால் பூமிக்கு அடியே உள்ள வேர்கள் வாயிலாகத்தான் தகவல் அனுப்பப்படுகிறது. இருப்பினும், அதற்கான சாதனங்கள் எவ்வாறானவை என்பதைக் கண்டுபிடிக்க வேண்டிய கட்டாயம் விஞ்ஞானிகளுக்கு ஏற்பட்டது. அவர்களது ஊகம் பூமிக்கு அடியே வேர்களுடன் பின்னிப்பிணைந்துள்ள ஒருவிதமான நுண்ணுயிர்க் காளான்கள்தான் தகவல்களைப் பரப்பும் சாதனமாக, இண்டர்நெட் போன்று செயல்படுகின்றன என்பதாகும். ஆனால், இந்த ஊகத்தை நிரூபிக்க வேண்டுமே!

இதற்கான நிரூபணம் இங்கிலாந்து நாட்டிலுள்ள அபர்டீன் பல்கலைக்கழகத்தில் இதேபோன்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த டாக்டர் ஜான்சனிடமிருந்து கிடைத்துள்ளது. செடிகளின் வேர்களில் பின்னிப் படர்ந்திருக்கும் வேர்களிலிருந்து இக்காளான் தனக்குத் தேவையான உணவை எடுத்துக்கொண்டாலும்கூட செடிகளுக்குச் சில முக்கியமான தாதுச் சத்துக்களையும் அளிக்கின்றன. இக்காளான்களினால் செடிகளுக்கு பாதிப்பு ஏதும் கிடையாது. மாறாகப் பலன்கள் நிறைய உண்டு. அதேசமயம், இக்காளான்களில் இயற்கையாகவே அமைந்துள்ள நுண்குழாய்கள் (Hyphae) வாயிலாக பூச்சிகளினால் பாதிக்கப்பட்ட செடிகளிலிருந்து தகவல் மற்றைய செடிகளுக்குப் பரவுகிறது என்பதும் சந்தேகத்திடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது.

இதற்கான பரிசோதனைகள் அபர்டீன் பல்கலைக்கழகத்தில் டாக்டர் ஜான்சன் அவர்களால் மேற்கொள்ளப்பட்டன. அவரை வகையைச் சார்ந்த பிராட்பீன் (Board Been) செடிகள் இருந்த தோட்டத்தில் ஆராய்ச்சி நடந்தது. நான்கு மாதங்கள் வளர்ந்திருந்த ஒரு செடியை செடிப்பேண் தாக்கியது. நான்கு மாதங்கள் நிறையும்போதுதான் வேர்மண்டலங்களில் நுண்ணுயிர்க் காளான்கள் முழுவதுமாகப் பரவி, மற்ற செடிகளின் வேர்ப்பகுதிகளுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளும் விதமாக (இயற்கையாகவே) பின்னிப் படர்கின்றன. சைனாவில் செய்தது போலவே செடியின் மேற்பகுதியிலிருந்து காற்று மூலம் 'செய்தி' பரவாதபடி செடிமூடப்பட்டது. அதற்குப்பின்பும் பக்கத்தில் உள்ள செடிகளில் தடுப்பு சக்திகளுக்கான மரபணுக்கள் செயல்படத் தொடங்கின. அடுத்தபடியாக முக்கியமான ஒரு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன்படி பாதிப்புக்குள்ளான செடிகளின் வேர்ப்பகுதிகளின் சுற்றுப்பகுதி தோண்டப்பட்டு பாதிப்புக்குள்ளாகி இருந்த செடிகளின் வேர் வழி காளான் தொடர்பு முற்றிலுமாக துண்டிக்கப்பட்டது. இந்த நடவடிக்கையைத் தொடர்ந்து சுற்றிலுமுள்ள செடிகளில் எதிர்ப்பு சக்திக்கான மரபணுக்கள் செயல்படாத காரணத்தால் அசுவனிப் பூச்சிகள் ஜோராக ஆக்ரமித்து செடிகள் நோய்வாய்ப்பட்டன. இவ்வாறாக பூமிக்கடியில் வேர்களில் பிணைந்துள்ள காளான்கள் 'இண்டர்நெட்' சாதனமாகச் செயல்பட்டு செடிகளிடையே தகவல் பரிமாற்றத்திற்குக் காரணமாக அமைகின்றன என்பது சந்தேகத்திற்கிடமின்றி உறுதி செய்யப்பட்டது.

இந்த ஆராய்ச்சி தாவரங்களிடையே தகவல் பரிமாறிக்கொள்ளப்படுவது பற்றிய முதல்கட்டம்தான் என்பதை இங்கே குறிப்பிடவேண்டும். பிராட்பீன் என்று அழைக்கப்படும் அவரைவகைத் தாவரத்தில் வேர்வழியாக குறிப்பிட்ட காளான்கள் தகவல்களைப் பரப்புகின்றன என்பது உண்மைதான். பல்வேறு மரம், செடி கொடிகளின் வேர்களிலும் – வேறு விதமான காளான்களும் நுண்ணுயிர்களும் வாழ்கின்றன. அவ்வகையான தாவரங்களுக்கிடையேயும் இதுபோன்ற 'இண்டர்நெட்'

வசதி உள்ளதா என்பதை வருங்கால ஆராய்ச்சிகள் வாயிலாகத்தான் அறியமுடியும்.

இருப்பினும், இப்போது நமக்குத் தெரிந்துள்ள இந்த தகவலே அதிசயமான ஒன்றுதான் என்பதில் சந்தேகமில்லை.

*பின்குறிப்பு:– சமீபகால 'இண்டர்நெட்' ஆராய்ச்சி பற்றிய தகவல்கள் The Economist 2013 ஜுலை 6 தேதியிட்ட ஆங்கில வார இதழில் வெளியாகியுள்ளது.*

## சௌபாக்ய இல்லம்

விவேகானந்த கேந்திரா மூலம் கோவை அருகிலுள்ள கல்விளையில் நடைபெற்ற ஒருவாரகால அறிவியல் முகாமில் (12–05–2013 முதல் 17–05–2013 வரை) சௌபாக்ய இல்லத்திலிருந்து 20 குழந்தைகள் பங்கேற்றனர். இம்முகாமின் மூலம் குழந்தைகளின் அறிவியல் சிந்தனை வளர்ச்சி அடைவதற்கு உதவியாக இருந்தது.

12–ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் தேர்வு எழுதிய ஒன்பது மாணவிகளும் தேர்ச்சி பெற்றுள்ளனர். மேலும், 10–ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் 16 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

சௌபாக்ய இல்லக் குழந்தைகளான செல்வி சாந்தி, செல்வி கயல்விழி ஆகிய இருவரும் தமிழ்நாடு இசைக்கல்லூரியில் ஐந்து வருட பரத நாட்டியப் பட்டயப் படிப்பு முடித்து தற்பொழுது சௌபாக்ய இல்லத்தில் நடன ஆசிரியர்களாகப் பணிபுரிந்து வருகின்றனர்.

சௌபாக்ய இல்லத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு முதலுதவி, வருமுன் காப்போம், பொதுவாக வரக்கூடிய நோய்களுக்கு எவ்வாறு சிகிச்சை அளிப்பது பற்றி கஸ்தூர்பா மருத்துவமனையில் பணிபுரியும் செல்வி வேலம்மாள் அவர்களும் செவிலியர் கண்பாணிப்பாளர் திருமதி பல்கீஸ் அவர்களும் இணைந்து ஒருநாள் பயிற்சி அளித்தனர்.



உலக வங்கி நிறுவனத்தின் சென்னைக் கிளையில் பணிபுரிந்துவரும் திரு. சதீஸ் குமார் அவர்கள் இல்லக் குழந்தைகளுக்கு ரூ. 15,771/– மதிப்புள்ள நோட்டுப் புத்தகங்களை நன்கொடையாக வழங்கியுள்ளார். காந்திகிராம கிராமியப் கல்கலைக்கழகத்தின் ஆங்கிலத்துறைப் பேராசிரியர் டாக்டர் குபேந்திரன் அவர்கள் ரூ.4000/– மதிப்புள்ள நோட்டுப் புத்தகங்களை நன்கொடையாக வழங்கினார்.

## கஸ்தூரிபா சேவிகாசிரமம் சிறப்பு மேல்நிலைப்பள்ளி

கஸ்தூரிபா சேவிகாசிரமம் சிறப்பு மேல்நிலைப் பள்ளியில் ஆறாம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை 104 மாணவிகள் பள்ளியில் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். தற்போது இப்பள்ளியில் 240 மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர்.

மார்ச் 2013–இல் நடைபெற்ற 10–ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் 98 சதவீத மாணவிகள் தேர்ச்சி பெற்றுள்ளனர். செல்வி S. சிவதர்ஷினி என்ற மாணவி 422 மதிப்பெண்கள் பெற்று பள்ளியில் முதலிடம் பெற்றுள்ளார். 12–ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் 76 சதவீத மாணவிகள் தேர்ச்சி பெற்றுள்ளனர். செல்வி M. கௌமாரியம்மாள் என்ற மாணவி 1038 மதிப்பெண்கள் பெற்று முதலிடம் பெற்றுள்ளார்.

விலையில்லாப் பாடப்புத்தங்கள், குறிப்பேடுகள், காலணிகள், சீருடைகள் பெறப்பட்டு மாணவிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும், 10, 12–ஆம் வகுப்பு மாணவிகளுக்குச் சிறப்பு வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

பள்ளி மாணவிகளின் பாதுகாப்புக் கருதி பள்ளி வளாகத்திதைச் சுற்றிலும் சுற்றுச்சுவர் கட்டப்பட்டுள்ளது. பெற்றோர் ஆசிரியர் கழகக் கூட்டம் நடைபெற்றது. இதில் பள்ளியின் வளர்ச்சி மற்றும் மாணவிகளின் கல்வித் திறனை மேம்படுத்துவது குறித்து பெற்றோர்களுடன் கலந்து பேசப்பட்டது. பெற்றோர்கள் தங்களால் முடிந்த உதவிகளைச் செய்வதாகக் கூறினர்.

## சாந்தி காதுகேளாதோர் உயர்நிலைப்பள்ளி

சாந்தி காதுகேளாதோர் பள்ளியில் மொத்தம் 98 மாணவ மாணவியர் கல்வி பயில்கின்றனர். பத்தாம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வு எழுதிய ஏழு மாணவர்களில் நான்கு பேர் வெற்றி பெற்றுள்ளனர். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு நியு கிரியேசன் பவுண்டேசன் பரிசுகளை வழங்கியது.



விக்ரமசிங்கபுரத்தில் நடைபெற்ற தாமிரபரணி Sports Camp –இல் 21 மாணவர்கள் கலந்துகொண்டு பரிசுகள் பெற்றுள்ளனர்.

சிம்ஸன் கம்பெனி மூலமாகப் பள்ளி, விடுதி மற்றும் அனைத்துக் கட்டிடங்களுக்கும் வெள்ளையடிக்கப்பட்டன.

## காந்திகிராம தொடக்கப்பள்ளி

காந்திகிராமத் தொடக்கப்பள்ளியில் 308 மாணவ மாணவியர் கல்வி பயில்கின்றனர். அனைவருக்கும் விலையில்லா நோட்டுப் புத்தகங்கள், புத்தகப் பை, வண்ணப் பென்சில், காலணி, சீருடை வழங்கப்பட்டன.

அபராஜிதா அறக்கட்டளையிலிருந்து வெளிவரும் "தளிர்திறன்" புத்தகத்திலிருந்து மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கப்படுகிறது. அதில் சிந்திக்கும் திறன், உற்று நோக்கும் திறன், படைப்பாற்றலை வெளிக்கொணரும் திறன், நடிப்பாற்றல் போன்ற திறமைகள் அதிகமாகக் கற்றுத் தரப்படுகிறது. ஆகஸ்ட்டு மாதம் முதல் இப்பள்ளிக்கு மின்னஞ்சல் சேவை பெறப்பட்டுள்ளது. e-mail முகவரி gpsggmtrust@gmail.com

## தம்பித்தோட்டம் மேல்நிலைப்பள்ளி

மார்ச் 2013–இல் நடைபெற்ற 12–ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் செல்வன் A. சேவியர் ரெனி பிரசாத் 1100 மதிப்பெண்கள் பெற்று முதலிடமும் செல்வி தேவி மீனா 1084 மதிப்பெண்கள் பெற்று இரண்டாம் இடமும் பெற்றுள்ளனர். 98 சதவீத மாணவ மாணவியர் இத்தேர்வில் வெற்றி பெற்றுள்ளனர்.

10–ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் செல்வி G. மகாலெட்சுமி 488 மதிப்பெண்கள் பெற்று முதலிடமும் செல்வி D. காவியா 486 மதிப்பெண்கள் பெற்று இரண்டாம் இடமும் பெற்றுள்ளனர். 88 சதவீத மாணவ மாணவியர் தேர்ச்சிபெற்றுள்ளனர்.

மாணவ–மாணவியருக்குக் கோடைகால விடுமுறையிலும் சிறப்பு வகுப்புகள் நடத்தப்பட்டன. மாணவ மாணவியர் அனைவரும் கிராமப்புறப் பகுதிகளிலிருந்து வருவதால் அவர்களது கல்வி கற்கும் திறனை வளர்க்கத் தொடர் சிறப்பு வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு. நத்தம் விஸ்வநாதன் அவர்கள் 12–ஆம் வகுப்பு மாணவ மாணவியருக்கு 05–07–2013 அன்று விலையில்லா மடிக்கணினிகளை வழங்கினார்.

## லெட்சுமி கல்வியியல் கல்லூரி

காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகம், தாவரவியல் துறையைச் சார்ந்த முனைவர் ஆர். ராமசுப்பு அவர்கள் கல்லூரி மாணவ மாணவியருக்குப் பல்லுயிர் பெருக்கம் பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார்.

'திறமைமிக்க ஆசிரியர்' என்ற தலைப்பில் ஒருநாள் கருத்தரங்கு நடைபெற்றது. கோயம்புத்தூர் KKID நிறுவனத்தின் பயிற்றுநர் திரு. டாம் ஜோ அவர்கள் அதில் பங்கேற்று திறமைமிக்க ஆசிரியராக உருவாக மேற்கொள்ளவேண்டிய வழிமுறைகளையும் திறன்களை வளர்க்கவேண்டியவை பற்றியும் விளக்கமளித்தார்.

## உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்துதல்

காந்திகிராம அறக்கட்டளையின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்காக காந்திகிராம விற்பனைப் பிரதிநிதிகள் உருவாக்கப்பட்டு, அவர்கள் மூலமாக கிராமப்புறங்களில் விற்பனை செய்து வருகின்றனர். மேலும், உற்பத்திப் பொருட்களின்



விற்பனையை அதிகப்படுத்தும் பொருட்டு திருமதி லாவண்யா, திருமதி பவானி மற்றும் திரு. சந்திரபோஸ் ஆகியோர் இணைந்து, உசிலம்பட்டி பகுதியில் விழிப்புணர்வு முகாமிற்கு ஏற்பாடு செய்திருந்தனர். இம்முகாமில் ஒன்பது விற்பனைப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். இவர்கள் சித்தா ஆயுர்வேத மருந்துகள், மூலிகைப் பொடிகள் மற்றும் கதர்கிராமக் கைத்தொழில் உற்பத்திப் பொருட்கள் அடங்கிய விளம்பர நோட்டீஸ் ஆகியவற்றை வீடு வீடாகச் சென்று மக்களுக்குக் கொடுத்து, பொருட்களையும் விற்பனை செய்தனர்.

இந்த விழிப்புணர்வு முகாம் மதுரை ரோடு, பேரையூர் ரோடு, சிவன் காளைத் தெரு, மூக்கையா தேவர் தெரு, காவனம்பட்டி மற்றும் மாமரத்துப்பட்டி ஆகிய பகுதிகளில் நடத்தப்பட்டது. இதேபோன்ற முகாம், தேனியிலும் நடைபெற்றது.

இம்முகாம்களினால் பாரம்பரிய சித்தா ஆயுர்வேத மருந்துகள் பயன்பாடும், கதர்கிராமக் கைத்தொழில் உற்பத்திப் பொருட்களின் பயன்பாடும் அதிகரித்துள்ளன. பாரம்பரிய மருந்துகளைப் பயன்படுத்தி நோயற்ற வாழ்வைப் பெறுவோம் என அவர்கள் முழக்கமிடுகின்றனர்.

## பல்நோக்கு மறுவாழ்வுப் பயிற்சி

நிலக்கோட்டை ஒன்றியப் பகுதிகளில் மாற்றுத் திறனாளிகளை வலுப்பெறச் செய்யும் பணிகள் புதுவாழ்வுத் திட்டத்துடன் இணைந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக ஊராட்சி அளவில் பணிபுரியும் சமுதாய மாற்றுத் திறனாளிகளுக்கான ஊக்குனர்களுக்கு 15 நாட்கள் பல்நோக்கு மறுவாழ்வுப் பயிற்சி காந்திகிராம அறக்கட்டளையில் நடைபெற்றது. பயிற்சியின்போது திருநெல்வேலி மாவட்டம், தென்காசிக்கு அருகிலுள்ள அமர்சேவா சங்கம், சாந்தி காதுகேளாதோருக்கான சிறப்புப் பள்ளி, மன வளர்ச்சி குன்றியவர்களுக்கான பள்ளி மற்றும் மாற்றுத் திறனாளிகளைக் கொண்டு நடத்தப்படும் தொழில்



மையங்கள் ஆகியவற்றிற்கு பட்டறிவுப் பயணமாக அழைத்துச் செல்லப்பட்டனர். இதனால், மாற்றுத் திறனாளிகளுக்கு தன்னம்பிக்கை, தொழில் செய்யும் ஆர்வம், திறமைகளை வளர்த்துக்கொள்ளவேண்டும் என்ற எண்ணம் ஆகியவை உருவாக வாய்ப்புள்ளது.

## இயற்கை விவசாயத்தின் மூலம் அவுரி சாகுபடி மற்றும் சாயம் எடுத்தல்

காந்திகிராம அறக்கட்டளை, இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறையின் நிதியுதவியுடன் Core-Support திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. இதில் அறுவடை பின்சார் தொழில்நுட்பம், ராட்டை மற்றும் தறியில் புதிய தொழில் நுட்ப மேம்பாடு, இயற்கை முறையில் அவுரி சாகுபடி செய்து அதன் மூலம் இயற்கைச் சாயம் தயாரிக்கப்பட்டு துணிகளில் சாயம் ஏற்றுதல், பேபி டயாப்பர் தயாரிக்கத் தேவையான இலகு இயந்திரங்கள் நிறுவப்பட்டு உற்பத்தி செய்தல், போன்றவற்றில் ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தின் மூலம் "இயற்கை விவசாயத்தில் அவுரி



பயிர்செய்தல் மற்றும் அதிலிருந்து சாயம் எடுத்தல்" பயிற்சி 01–08–2013 மற்றும் 02–08–2013 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. இப்பயிற்சியில் காந்திகிராம அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் திரு.எம்.ஆர்.ராஜகோபாலன் அவர்கள் கலந்துகெண்டு, அவுரியின் பயன்பாடு பற்றியும் 1917–ஆம் ஆண்டில் பீகார் மாநிலத்தில் உள்ள சம்பாரனில், அவுரி பயிரிட்ட விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைப்பதற்காக காந்திஜி தலைமையேற்று நடத்திய பேராட்டம் பற்றியும் பேசினார். மேலும், அவுரி பயிர் செய்வதன் முக்கியத்துவத்தையும், அதன் சாயத்தை ஆயத்த ஆடைகளில் பயன்படுத்துவது பற்றியும் விளக்கினார்.

இப்பயிற்சியில், வெள்ளோடு, கோம்பை, கல்லுப்பட்டி மற்றும் சேவாப்பூர் ஆகிய கிராமங்களிலிருந்து விவசாயிகள் கலந்துகொண்டனர். பெரியகுளம் தோட்டக்கலைக் கல்லூரியிலிருந்து 10 மாணவிகளும் இயற்கை சாயமேற்றப்பட்ட துணிகளின் மேல் நாட்டம்கொண்ட ஜப்பானைச் சேர்ந்த திரு. மோடோமொச்சி (Moto Mochi) அவர்களும் கலந்துகொண்டனர். இப்பயிற்சியில் செய்முறைப் பயிற்சியுடன் அவுரி பயிர் செய்யப்பட்ட களப்பகுதியை பார்வையிடவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

முதன்மை திட்ட அலுவலர் டாக்டர் வி.பாலமுருகன் அவர்களும் திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு.சி. கிருஷ்ணசாமி அவர்களும் மற்றும் திட்ட அலுவலர் திரு.எஸ்.முருகேசன் அவர்களும் பயிற்சிக்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

## குடிநீர் திட்டப்பணிகள் பற்றிய மதிப்பாய்வு

பெங்களூரிலுள்ள அர்கெயம் நிறுவனத்தின் நிதியுதவியோடு, சமுதாயம் தழுவிய குடிநீர் நிர்வாகம் 2006–ஆம் ஆண்டு நவம்பர் முதல் அக்டோபர் 2008 வரை காந்திகிராம அறக்கட்டளையில் நடைபெற்றது. இத்திட்டத்தின் மூலம் நான்கு ஊராட்சிகளில் உள்ள குடிநீர்நிலைகள் மக்களின் பங்கேற்பு மற்றும் பங்களிப்போடு நடைபெற்றது. மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, திறந்த வெளிக்கிணறு, பொதுக் குழாய்களில் மேடை அமைத்தல், அடி குழாய் சீரமைப்பு போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு சீரமைக்கப்பட்டன. ஊராட்சிகள் மற்றும் பொதுமக்கள் இவைகளை நல்லமுறையில் பயன்படுத்திப் பாதுகாத்து வருவதை, அர்கெயம் திட்ட மேலாளர் திரு. ஸ்ரீகண்ட



பிரசன்னா அவர்கள் 08–07–2013 மற்றும் 09–07–2013 ஆகிய தேதிகளில் ஆய்வுசெய்தார். அவர் ஊராட்சி மன்றத் தலைவர், உறுப்பினர்கள், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்கள், பெண்கள் மற்றும் பள்ளி மாணவர்களிடம் கலந்துரையாடினார். மேலும், அனைத்துக் குடிநீர் ஆதாரங்களும் இயங்குகின்றனவா என்பதையும் குடிநீர் பிடிக்குமிடங்கள் சுத்தமாகப் பராமரிக்கப்படுகின்றனவா என்பதையும் ஆய்வுசெய்தார்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் நிறைவேற்றப்பட்ட இப்பணிகள், தொடர்ந்து கவனம் செலுத்தப்படுவதாகவும் மக்கள் நல்ல முறையில் அதனைப் பயன்படுத்தி, பாதுகாத்து வருவதாகவும் அவர் கூறினார்.

## துளசி சாகுபடி பற்றிய பயிற்சி

காந்திகிராம அறக்கட்டளையில், லக்னோவிலுள்ள இந்திய மருத்துவம் மற்றும் நறுமணத் தாவரங்கள் மையம், பெங்களூரு வள மையத்தின் மூலம் 06–08–2013 அன்று விவசாயப் பெருமக்களுக்கு துளசி சாகுபடி மற்றும் எண்ணெய் எடுப்பது பற்றிய பயிற்சி அளித்தது. CIMAP நிறுவனத்தின் CIMAP பெங்களூரு வள மையத்தைச் சேர்ந்த முனைவர் வி. சுந்தரேசன் (பொறுப்பு) அவர்கள் பயிற்சியின் நோக்கம் பற்றி எடுத்துரைத்தார். CIMAP இன் கள அலுவலர்கள் திரு.பாஸ்கரன் மற்றும் திரு.சிவசுப்பிரமணியம் ஆகியோர் துளசி சாகுபடி பற்றியும்



அதன் மூலம் பெறப்படும் வருவாய் பற்றியும் விவரித்தனர். மேலும், விவசாயிகளுக்கு உயரியவகை துளசி விதைகள் இலவசமாக வழங்கப்பட்டன. சுற்றுப்புறக் கிராமங்களிலிருந்து சுமார் 50 விவசாயிகளும் பெரியகுளம் தோட்டக்கலைத்துறை மாணவியரும் கலந்துகொண்டனர். காரைக்குடியிலுள்ள மின்வேதியியல் ஆராய்ச்சி நிறுவனத்திலிருந்து (CSIR) முனைவர் ராஜசேகர் மற்றும் முனைவர் ராதாகிருஷ்ணன் ஆகியோர் பார்வையாளர்களாகக் கலந்துகொண்டனர். மேலும், இதுபோன்ற விவசாயச் சாகுபடி முறைகளை இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள பின்தங்கிய கிராமங்களில் செயல்படுத்தப்பட இருப்பதாகவும் தெரிவித்தனர். இப்பயிற்சியினை, காந்திகிராம அறக்கட்டளையின்

CIMAP–இன் முதன்மைத் திட்ட அலுவலர் முனைவர் வி.பாலமுருகன், திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. சி.கிருஷ்ணசாமி, திட்ட உதவியாளர் திரு. முரளி ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

## நிறுவன ஒருங்கிணைப்பு கலந்தாய்வு

காந்திகிராம அறக்கட்டளையில், 06–08–2013 அன்று திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்தின் துணைத் தலைவர் திரு. ஆராவமுதன் அவர்கள் மற்றும் காந்திகிராம அறக்கட்டளையின் செயலாளர் திரு. கி. சிவக்குமார் அவர்கள் தலைமையில் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் காந்திகிராம அறக்கட்டளையின் அனைத்து அலகுகளின் தலைவர்கள் மற்றும் காந்தி ஆசிரமத்தின் பணியாளர்கள் கலந்துகொண்டனர்.



காந்தி ஆசிரமம், காந்தியக் கொள்கைகளைப் பின்பற்றி கதர் கிராமப் பொருட்களை உற்பத்தி செய்து வருவதாகவும், உற்பத்திப் பொருட்கள் பண்டமாற்று அடிப்படையில் நடைபெற்று வருவதாகவும் திரு.ஆராவமுதன் கூறினார். மேலும், எங்கெல்லாம் தேவை அதிகமாக இருக்கிறதோ அங்கெல்லாம் பணியாளர்களுக்குப் பயிற்சியளித்து உற்பத்தியை அதிகப்படுத்தி விற்பனை செய்துவருவதாகவும் கூறினார். இரண்டு நிறுவனங்களுக்குமிடையே ஒரு புரிந்துணர்வு அடிப்படையில் உறவுகள் நீடித்து வளரவேண்டும் என்றும், இரண்டு நிறுவனங்களுக்குத் தேவையான பொருட்களை உற்பத்தி மற்றும் விற்பனை செய்வதை இணைந்து செயல்படுத்தலாம் எனவும் காந்திகிராம அறக்கட்டளையின் செயலாளர் திரு. கி. சிவக்குமார் அவர்கள் கூறினார். மேலும், இதன் முதல் கட்டமாக நான்குபேர் திருச்செங்கோடு சென்று அங்கு நடைபெறும் உற்பத்தி விற்பனை முறைகளைப் பார்வையிட்டு வருமாறு காந்திகிராமப் பணியாளர்களைக் கேட்டுக்கொண்டார்.

## தாகூர் தினவிழா

காந்திகிராம அறக்கட்டளையில், 07–08–2013 அன்று தாகூர்தினவிழா நடைபெற்றது. இவ்விழாவில் காந்திகிராம அறக்கட்டளையின்கீழுள்ள அனைத்துக் கல்வி நிறுவனங்களிலுந்தும் மாணவ–மாணவியர், பணியாளர்கள் கலந்துகொண்டனர். சிறப்பு விருந்தினராகத் தம்பித்தோட்டம் மேல்நிலைப்பள்ளியில் பணிபுரிந்து பணிநிறைவுபெற்ற தமிழாசிரியர் திரு. கதிர்வேல் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.



அவர் தமது சிறப்புரையில், தாகூரின் இளவயது கல்வி அனுபவங்களையும் அவரது வாழ்க்கையையும் எடுத்துக் கூறினார். சௌபாக்ய இல்லத்தின் தாளாளர், செல்வி. கே.எஸ். நீலா அவர்கள் தனது வரவேற்புரையில், தாகூர் எழுதிய கீதாஞ்சலியையும் பிற அறிஞர்கள் எழுதிய புத்தங்களையும் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் என்று வலியுறுத்தினார். முன்னதாக, டாக்டர் டி.எஸ். சௌந்தரம் வித்யாலயா வளாகத்தில் வாழ்நாள் அறங்காவலர் டாக்டர் ஆர். கௌஸல்யாதேவி அவர்கள் மரக்கன்றுகளை நட்டார்.

*(For Private Circulation Only)*
*Editorial Team :* **Smt. N. Ramuthai, Smt. R. Revathi, Smt. Meenakshi**
Gandhigram Trust, Gandhigram - 624 302
**Phone :** 0451 - 2452326 & 2452400 **Fax :** 0451 - 2453347
**e_mail :** ggmtrust@sify.com **www.** gandhigram.org

அச்சிட்டோர்: டாக்டர் சௌந்தரம் அறக்கட்டளை, காந்திகிராமம் – 624 302, Telefax : 0451 - 2453347